ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

வைதிகஸம்பிரதாயத்திலேயே ஈடுபட்டிருந்த குடும்பங்கள் பரலோகவாஸனையேயில்லாமல் லௌகிகமே பெரிதெனக்கருதி அதற்கு வேண்டிய கார்யத்தைச் செய்துவருகின்றன. அந்தக் குடும்பங்களில் தற்காலம் கிழத்தனத்தையடைந்தவர்கள் தங்களது பால்யத்தில் படிந்த பழைய வாஸனையால் தேவபாஷையை வியக்தமாக உச்சரிக்கவாவது செய்வார்கள். அப்படியிருப்பவர்களும் பெரிய மோஹப்பட்டு தமது குழந்தைகள் இந்த ஸ்திதியிலிருக்கவேண்டாமென்றும் உயர்தரப்படிப்பை படித்து பெரிய உத்யோகம் செய்து பெருத்த ஐச்வர்யவானாக ஆய்விடவேண்டுமென்றும் நினைத்துப் பூர்வீக ஸொத்தையும் விற்று ஸம்ஸ்கிருத கந்தமேயில்லாமல் விலக்கி ஆங்கிலப்படிப்பையே இளமைப்பருவத்திலேயே கற்றுக்கொடுக்கிறார்கள். அந்தப்படிப்புப் பூராவானதும், பூர்வீக ஸொத்துத் தொலைந்ததும், வேலையில்லாத் திண்டாட்டத்தினால் அந்தக் குழந்தையுள்பட ஆஹாரத்திற்குக்கூட வழிதெரியாமல் விழித்துக்கொண்டிருக்கிறார்கள். வேததனத்தையும் லௌகிகத்தனத்தையுமிழந்ததைத் தவிர கண்ட பயன் வேறு யாதுமில்லை. புதுவழியிற் புகுந்த சிறுவர்களது புத்தியில் பழையவழியெல்லாம் தப்பாகத் தோன்றுகின்றதேயன்றி சரியாகத் தோன்றுவதில்லை. காசாசையோ பலமாயிருப்பதால் புதிதுபுதிதாகக் கிளம்பிவரும் ஒவ்வொரு கூட்டத்திலும் கூடிப்பார்த்தும் பயனையடைவதைக் காணோம். தங்களிஷ்டம் தடைபட்டபொழுதாவது “இது தடைபடக்காரணமென்ன. நாமே சுவதந்திரனாயிருந்து இஷ்டத்தை ஸாதிக்கச்சக்தியுள்ளவனாகில் இப்படி நேர்ந்திருக்கக்கூடாதே. நேர்ந்துவிட்டபடியால் அதற்குத் தடைசெய்தவனொருவன் இருக்கவேண்டும். அவன்தான் ஸ்வதந்திரனாயிருக்கவேண்டும். அவன்தான் நம்முடைய கர்மகதிப்படி நம்மை ஆட்டிவைப்பவன்” என்றஉணர்ச்சியுண்டாவதில்லை. வைதிகவழியினின்று புதுவழியில்திருப்பப்படாத குடும்பங்கள் இவ்வளவு மோசமான ஸ்திதிக்கு வந்துவிடவில்லையென்பதைக் கண்டுகொண்டும் சொல்லிக்கொண்டும் பழையவழியில் திரும்பமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள். இந்த ஸந்தர்ப்பத்தில் ஏதாவது ஒரு உபாயம் செய்யவேண்டுமேயென்று ஆலோசித்துப் பழைய வழியைவிட சரணம் வேறொன்றுமில்லை என உறுதியுடன் சில மஹான்கள் ஆங்காங்கு ஸநாதனதர்மஸபைகளை ஸ்தாபிக்கிறார்கள். அதனால் மாத்திரம் போரவில்லை. பழுக்கப்பழுக்கக் காய்ச்சப்பட்ட இரும்பில் விட்ட ஒரு சொட்டு ஜலம்போல் இந்த சீர்திருத்தக்காய்ச்சலில் காணப்படவே இல்லை. பலபேர்களுக்குத் தெரிவதேயில்லை. பலரைச் சேர்க்கவேண்டும். சுயமாகச் சேராதவர்களை பலாத்காரமாகவாவது சேரச்செய்யவேண்டும். ஸத்தியாக்கிரஹம் செய்துவிட்டால் ஸகல கார்யமும் ஜயித்துவிடுமென்று நினைப்பதை மாற்றவேண்டும். “ஹிந்துமதவியவஸ்தையில் ஸத்தியாக்கிரஹமென்ற பிடிவாதத்தைப் பிரயோகித்துவிட்டால் அதற்கோரளவுண்டோ? ஒரு வியவஸ்தையை மாற்றிவிட்டால் மற்றொரு வியவஸ்தையை மாற்ற ஸத்தியாக்ரஹமாரம்பிக்கப்படுகிறது. ஹிந்துக்களாயிருந்தே ஹிந்துமதாசாரத்தைக் கெடுக்க வழிதேடுவது நியாயமா? புறமதத்தார் அப்படிச் செய்வார்களா? அந்த விஷயத்திலாவது அவரைத் திருஷ்டாந்தமாகப் பார்த்துக்கொள்ளக்கூடாதா? ஸ்வமதாசாரத்தைக் கெடுக்க புறமதத்தாரோடு சேரலாமா” என்றாதி போதித்து எல்லோரும் ஸ்வமதாசாரத்தை விடாமல் அதையே பெரிதாக நினைத்து ஆசிரயித்து க்ஷேமத்தையடைவாராக. சுபம். பத்திராதிபர்.

ஸத்தியந்தான் ஜயிக்கும்.

"ஸத்தியந்தான் ஜயிக்கும், அஸத்தியம் ஜயம் பெருது, ஸத்தியத்தாற்ருன் விரிந்துகிடக்கும் வானவர் நாட்டையடையலாம்" என்று சுருதி கூறுகின்றது. ஸத்தியமென்பது மனதிற்ருேன்றியதையெல்லாம் பேசுவதல்ல. உண்மைப்பிரமாணமூலமாக நிச்சயமாய்த் தெரிந்துகொண்டதை மறைக்காமல் சொல்லுவதே ஸத்தியவசனமாகும். சுருதிதான் உண்மையான முக்கியப்பிரமாணமாகும். அதில் ஸர்வசிரேயஸ்ஸையுமடைவதற்குரிய ஸாதனங்கள் அதிகாரிக்குத்தக்கவாறு பலவாருக போதிக்கப்படுகின்றன. அந்த உண்மையைச் சிலர் தெரிந்துகொள்ளவில்லை. பண்டிதரெனப் பெயர் வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கே அது புலப்படவில்லை என்ருல் மற்றவர்களுக்குத் தெரியவில்லையென்பது ஆச்சரியமல்ல. அப்படியிருக்கையில் ஸாதாரணமாய் எல்லோரும் தாம் சொல்லுவதெல்லாம் ஸத்தியமேயென்றும் நடப்பதெல்லாம் நன்மைவழியே என்றும் பிறரை வஞ்சித்துவருகிருர்கள். ஒரு கேஸில் உண்மை ஒருவிதமிருக்க, அதையறிந்தவனொருவனிருக்க, அவன் எளியவனுனதால் அவன் வார்த்தையெடுபடாமல் கக்ஷிக்காரனிடம் காசைப் பரித்துக்கொண்டு "சொல்லுவதெல்லாம் ஸத்தியமே" என்று உறுதி சொல்லிவிட்டு உண்மைக்கு நேர் விபரீதமாக மிக சாமர்த்தியமாகப்பேசும் பொய்சாக்ஷியமே பலித்துவிடுவதுபோல வேதத்தில் கூறப்படும் 'உண்மையான சிரேயஸ்ஸாதனங்கள் ஓர் புறங்கிடக்க, அதையறிந்த மன்வாதிமஹரிஷிகள் மற்ருேர்புரம் இருக்க, அவர்களது ஸத்தியமானஉபதேசங்கள் கிரந்தவடிவமாய் விளங்க அதை யாதொன்றையும் லக்ஷ்யம் செய்யாமல் மடித்துவிட்ட கலிமஹாராஜனது ஆக்ஷியில் அவையெல்லாம் எடுபடாமல் இம்மைப்பயனையே பெரிதெனப்புகட்டி சமத்காரமாகப் பேசிவரு

வசே புத்திவலிமையில்லாத சில சிறுவரிடம் பலித்துவிடுகிறது. பிரமாணபூர்வகமாகத் தெரிந்துகொண்டா தற்காலத்தியவர் ஸாதனோபதேசம் செய்கின்றனர். பிரமாணக்கிரந்தங்களையெல்லாம் பொசுக்கிவிடவேண்டுமென்று சிறுவருக்குப் புகட்டுமிவர்கள் அவைகளைக் கனவிலாவது பார்த்திருப்பார்களா? நினைவிலாவது வைத்துக்கொண்டிருப்பார்களா? அப்படியிருந்தால் பெரியோரிடம் பழிசுமத்துவார்களா? இப்படியெல்லாம் சாஸ்திரவிபரீதமாகப் பேசுகிறவர் பேச்சு ஸத்தியவசனமாகுமா? பரலோகஹிதமாகுமா? இஹத்திற்குத்தான் உதவுமா? ஒன்றுக்குமுதவாமலிருந்தே அதுவுமிவ்வுலகத்தில் உலாவிக்கொண்டுவருவது கலியின் மஹிமையேதவிர வேறல்ல. ஸத்தியாக்கிரஹமென்ற ஸத்தியபதம் சேர்ந்த வார்த்தையைக் கேட்டவுடன் இதிலும் ஸத்தியக்கலப்பு இருக்கலாமோவென்ற பிராந்தியுண்டாகிறது. அது உண்மையில் ஸத்தியத்தில் ஆக்கிரஹம் கொள்ளுவதற்காக ஏற்பட்டதல்ல. सत् आग्रह: என்று ஸத்துக்களிடத்தில் ஆத்திரப்படுவதற்காகின்றது. ஸத்தியாக்கிரஹப்பிரயோகம் செய்யுமிடமெல்லாம் சாஸ்திரவிபரீதவிஷயமாகின்றதேயல்லாமல் சாஸ்திரஸம்மதவிஷயமாயில்லை. சாஸ்திரஸம்மதவிஷயமாகுமானால் அதிற்கூறியபடி அவரவர் நிற்க வேண்டியது உசிதமேயாகும். அதுவிஷயத்தில் ஸத்தியாக்ரஹம் எதற்காகத் தேவை? ஸமத்துவபாவனையில்லாதவரைக் கண்டிப்பதற்குத் தேவையாகிறதென்றால் ஆங்கு ஸமத்துவபாவனை என்றால் என்ன என்பதைப்பற்றி விசாரிக்கவேண்டும். "தன்னைப்போலவே எல்லோரையும் பாவித்து தனக்கு சுகம் வேண்டுவதுபோற்றான் பிறருக்கும் சுகம் வேண்டுவதாகும். அதனால் அது எல்லோருக்கும் கிடைக்கட்டும். தனக்கு துக்கம் வேண்டாமலிருப்பதுபோலவேதான் எல்லோருக்கும் துக்கம் வேண்டாமலிருக்கும். ஆகையால் அது ஒருவருக்குமுண்டாகக்கூடாது" என்று நினைப்பது ஸமத்துவபாவனையென்றால் இது கீதையில் பகவானாலேயே கொண்டாடப்படுகிறது. இந்த பாவனை வைதிகர்களிடம் பூர்ணமாயிருப்பதால் அவரைக் கண்டிக்கவேண்டியது அனாவசியம். வைதிகர்களை விட்டவேண்டுமென்பவரோ இத்தகைய ஸமத்துவபாவனையில்லாதவராகின்றார். அவர்களைக் கண்டிக்கவேண்டும் என்றுதான் வைதிகர்களும் சொல்லுகிறார்கள். அல்லது ஸமத்வபாவனையென்பது கீழ்க்குறித்தவாறல்ல. ஆனால் தாழ்த்தப்பட்ட

வரைத் தூக்குவது என்றால் அது ஒருநாளும் ஸமத்துவபாவனை யாகாது. தாழ்ந்தவனைத் தூக்குவதெப்படி? ரூபத்தில் தூக்குவதா, ஆசாரத்தில் தூக்குவதா, ஆஹாரத்திலா, கல்வியிலா, காமத்திலா எவ்விதத்திலானாலும் அது அஸாத்யகார்யமேயாகும். அப்படித்தூக்குவது சிரேயஸ்ஸாதனமென்று சாஸ்திரத்திலும் காணப்படவில்லை. "அவனவன் ஸ்வதர்மத்தில் அவனவன் நிற்பதே நல்லது" என்று சாஸ்திரம் கூறுவதால் தாழ்த்தப்பட்டவனை அந்த நிலையை விடும்படி செய்து உண்மையில் அவனுக்கு க்ஷேமகரமாகாது. மேல்கிளாஸில் மாற்றத்தகுதியில்லாதவனை அதிலேற்றி வைக்கப்பார்ப்பது அவனது அபிவிருத்திக்குக் காரணமாகாதென்பது போதனாமுறையைப் பயின்றவர்களுக்குப் புலப்படாத விஷயமில்லை. அதனால் சாஸ்திரம் சொல்லுகிறபடி கூறுவதே ஸத்தியம், அதுதான் ஜயிக்கும். அந்த ஸத்தியத்தில் உறுதிவைத்து யாவரும் சிரேயஸ்ஸையடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

மத்வாவதாராத்புதலீலாரகஸ்யங்கள்

(1012ம்-பக்கத்தொடர்ச்சி.)

கீழ்க்காட்டியபடி பிரச்சன்னசார்வாகமதமாயும், பிரச்சன்ன பௌத்தமதமாயுமுள்ளமத்வமதம் அந்தரங்கத்தில் ஜைனமதத்தில் சார்வாக பௌத்தமதங்களைவிட அதிகமான பக்தியுடன் கூடியது என்பது மூன்றாவது ரஹஸ்யம். இது ரொம்பவும் விசேஷமாக கவனிக்கவேண்டிய விஷயம். அதுவருமாறு—ஜைனர்கள் உலகத்திலுள்ள ஸமஸ்தமான பதார்த்தங்களும் ஒரேவிதமாயில்லாமல் ஸத்து, அஸத்து, ஏகம், அனேகம், நித்யம், அனித்யம், பின்னம், அபின்னம், வாச்யம், அவாச்யம், ஸ்ரூபம், விரூபம், முதலிய பரஸ்பரவிருத்தமான பலவித தர்மங்களுக்கு இருப்பிடமாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். அதனால் அவர்களுக்கு அனேகாந்தவாதிகள் என்றுபெயர். ஏகாந்தம் என்றால் நியமம் என்று அர்த்தம். அதாவது ஒருவஸ்து இன்ன விதமாகத்தானுள்ளது என்னும் வ்யவஸ்தை. அவ்வித வ்யவஸ்தையில்லாமை அனேகாந்தம். இவ்விதம் ஒரேவஸ்து விருத்தமான பலவித தர்மங்களுக்கு இருப்பிடமாகஉள்ளது என்பதை

ஜைனர்கள் யுக்தியாலும் ஸாதிக்கின்றார்கள். அவ்வித யுக்தி என்னவென்றால் கூறுவாம். குடம்என்னும் வஸ்து ஸத்துதான் அஸத்து அன்று அதாவது எப்பொழுதும் உள்ளதுதான் ஒரு பொழுதும் இல்லாமலிருக்கிறதில்லை என்று ஒப்புக்கொண்டால் அப்பொழுது அதை உண்டுபண்ணுவதற்காகக் குயவன் சிரமப் படவேண்டாம் என்று ஏற்படும். ஏனெனில் இல்லாத வஸ்து வைத் தானேஉண்டுபண்ண எத்தனம் எடுக்கவேணும். இருப் புதை உண்டு பண்ணுவது உலகத்திலுண்டோ? ஆகையால் குடம் ஸத்துதான் என்று உறுதி சொல்லமுடியாது. குடம் அஸத்துதான் ஸத்தில்லை என்று உறுதி கூறுவோமாகில் அதுவும் தவறு. ஏனெனில் குடம் அஸத்தாயிருந்தால் அதை உண்டு பண்ணமுடியாது. முயல் கொம்பு முதலிய அஸத்தான வஸ் துவை உண்டுபண்ணமுடியுமா? அப்பொழுது குடத்தை உண்டு பண்ணுவதற்காகக் குயவன் சிரமப்படுவது வியர்த்தமாய் முடியும். ஆகையால் குடம் அஸத்துதான் என்றும் உறுதி கூறமுடியாது. ஆகையால் குடம் ஸத்துதான் என்றோ அல்லது அஸத்துதான் என்றோ உறுதியாகக் கூறமுடியாமல் ஸத்தாயும் அஸத்தாயும் உள்ளது. விருத்தமான இரண்டு தர்மங்கள் ஓரிடத்திலிருக்குமா என்றால் ஓரே விருக்ஷத்தில் கபிஸம்யோகமும் அதாவது குரங்கின் ஸம்பந்தமும், அதன் இல்லாமையும் இருப்பதாக எவ் விதம் பிரமாணத்தால் ஏற்படுகின்றதோ அதேவிதமாகக் கீழ்க் காட்டிய யுக்தியாகிய பிரமாணத்தால் ஸத்தாயும் அஸத்தாயும் ஓர் வஸ்து இருக்கலாம். ஈண்டு ஓர் சங்கை விருக்ஷத்தில் கபிஸம் யோகம் இவ்விதம் உபாதிபேதத்தால் கிளையிலும் அதன் இல் லாமை அடியிலும் வெவ்வேறு இடங்களில் இருக்கிறபடியால் அங்கு விரோதமில்லை. அதுபோல் குடம் அந்த இடத்தில் இருக்கிறது. இந்த இடத்திலில்லை, அந்தகாலத்திலிருந்தது. இந்தகாலத்திலில்லை. அந்தவிதமாயிருக்கிறது. இந்த விதமாய் இல்லை என்பதாக தேசம் காலம் ஸ்வரூபம் முதலிய உபாதி பேதத்தால் ஓரே குடத்தை ஸத் என்றும் அஸத்தென்றும் ஒப்புக்கொண்டால் அதில் விரோதமில்லை. இவ்விதம் எல்லா மதஸ்தர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

இதனால் ஜைனர்கள் கூறும் அனேகாந்தவாதம் ஏற்பட்டு விடாது. ஏனெனில் குடம் அந்தக்காலத்தில் இருக்கிறதுதான்

இந்தக்காலத்தில் இல்லாததுதான் என்று உறுதி கூறமுடியும். ஆனதால் ஒருவிதமும் உறுதிகூறமுடியாமையாகிய அனேகாந்த வாதம் எப்படி ஸித்திக்கும் என்று.

இதற்கு இது ஸமாதானம். ஒரே விருக்ஷத்தில் கபிஸம் யோகம் அதன் இல்லாமையாகிய இரண்டு விருத்த தர்மங்கள் நுனி அடியாகிய இரண்டு உபாதிகளின் பேதத்தால் இருக்கின்றது. ஆதலால் விரோதமில்லை. நுனியாகிய ஒரேஇடத்தில் இரண்டு விருத்த தர்மங்களும் உபாதிபேதமில்லாதிருக்கிறது. என்று ஒப்புக்கொண்டால்தானே விரோதம் என்று சொன்னால் அப்பொழுது நுனி அடியாகிய இரண்டு விருத்த தர்மங்களும் ஒரே விருக்ஷத்தில்தானே இருக்கின்றன. அதுகள் எந்த உபாதி பேதத்தால் இருக்கின்றன. அதுகளுக்கு வேறு உபாதிபேதம் கூறினால் அனவஸ்தா தோஷம். அதாவது முடிவில்லாமை என்னும் தோஷம் வரும். ஆகையால் உபாதிபேதமில்லாமலே ஒரே விருக்ஷத்தில் நுனி அடியாகிய விருத்த தர்மங்கள் இருப்பதுபோலவே ஸத்தாயிருக்குந்தன்மை அஸத்தாயிருக்குந் தன்மை என்னும் விருத்த தர்மங்களும் ஒரே குடத்தில் உபாதி பேதமில்லாமலே இருக்கலாம். இதிலும் குடம் அந்ததேசத்தி லிருக்கிறது. இந்ததேசத்திலில்லை. என்பது முதலிய தேச காலாதி உபாதிபேதம் கூறுவது தவறு. ஏனெனில் அந்ததேசம் இந்ததேசம் என்பது முதலியதேசகாலாதி உபாதிபேதரூபமான விருத்த தர்மங்களும் ஒரே மஹாதேச காலரூபமான இடத்தில் இருப்பதற்கு வேறு தேசகாலாதி உபாதிகளைக் கூறும்பொழுது அனவஸ்தாதோஷம் வருமல்லவா. ஆகையால் உபாதி பேதம் இல்லாமலே ஒரே இடத்தில் விருத்த தர்மங்கள் இருப்பதாகச் சில விடங்களில் கூறவேண்டியது அவச்யமாயிருப்பதால் எங்கும் உபாதிபேதம் கூறாமலே விருத்த தர்மங்கள் இருப்பதாக ஒப்புக் கொள்வதில் பாதகமில்லை.

ஒரே இடத்தில் ஸத்துவம் அஸத்துவம் இரண்டு மிருக்கு மானால் அதற்கு விருத்ததர்மங்களென்றுபெயர் எப்படி ஸித்திக்கு மென்றால் ஜைனமதத்தில் அந்தப்பெயர் கிடையாதுதான். ஜைன மதத்தில் ஒரே குடத்தில் ஏகத்தன்மைபோல் அனேகத் தன்மையு மிருப்பதால் ஒரு குடமே அனேக குடமாகிவிட்டபடியால் அதை

வைத்து வெவ்வேறு வஸ்துக்களில் விருத்ததர்மங்களிருப்பது போல ஒரே குடத்திலும் ஸத்துவம் முதலிய விருத்ததர்மங்களிருக்கலாம் அதுகளின் விரோதத்திற்கும் பாதகமில்லையெனில் அது பொருந்தாது, ஏனெனில் ஓரேகுடத்தில் ஏகத்தன்மை அனேகத்தன்மை என்னும் விருத்ததர்மங்களும் இருக்க வேண்டுமே. அதன் விரோதத்தை எவ்விதம் பரிஹாரம்செய்வது அதனால் தர்மங்களுக்கு விரோதமென்பதே கிடையாது என்பது தான் ஜைனமதத்தில் பரமஸித்தாந்தமாயுள்ளது. ஆகையால் வஸ்து ஒருவிதமென உறுதி கூறமுடியாமல் பலவிதமாயிருப்ப தால் அனேகாந்தவாதம் யுக்திக்குப் பொருத்தமுள்ளதே. நர ஸிம்மம் நாநாவர்ணங்களையுடைய சித்ரபடம் முதலிய வஸ்துக்கள் பலவிதமாக யிருப்பதும் அனேகாந்த வாதத்திற்கு உதாஹரணம். அனேகாந்தவாதத்திற்கு "ஸ்யாத்வாத:" ஸ்யாத்வாதம் என்று மற்றொரு பெயருமுண்டு. ஸ்யாத் என்னும் பதத்திற்கு அனே காந்தம் என்றுபொருள்.

ஸாங்கியர்கள் வஸ்து ஸத்துதானென்றும், சூன்யவாதிகளென்றும், பௌத்தர்கள் வஸ்து அஸத்துதானென்றும், தார்க்கிகர்கள் காலபேதத்தால் வஸ்து ஸத்தாகவும் அஸத்தாகவும் தான் உள்ளது என்றும், அத்வைதிகள் பிரபஞ்சம் அநிர்வசனீயம் அதாவது பொய்யாகத்தானுள்ளது என்றும், ஸாங்கியர்களின் பூர்வபக்ஷிகள் ஸாங்கியர்கள் சொல்வது தவறுதானென்றும், பௌத்தர்களின் பூர்வபக்ஷிகள் பௌத்தர்கள் சொல்வது தவறுதானென்றும், தார்க்கிகர்களின் பூர்வபக்ஷிகள் தார்க்கிகர்கள் சொல்வது தவறுதானென்றும் உறுதியாகக் கூறுகின்றார்கள். அவ்விதம் அவர்கள் சொல்லும் உறுதிகளெல்லாம் கிடையாது என்று முறையே

1. स्यादस्ति, 2. स्यान्नास्ति, 3. स्यादस्ति च नास्ति च, 4. स्यादवक्तव्यम्, 5. स्यादस्ति चावक्तव्यम्, 6. स्यान्नास्ति चावक्तव्यम्, 7. स्यादस्ति च नास्तिचावक्तव्यम् ।

என்னும் எழுவாக்யங்களைப் பிரயோகம் செய்து ஜைனர்கள் ஸாதிக்கின்றார்கள்.

இவ்விதம் எழுவிதமான வாக்யங்களைக்கொண்டு எழு விதமான வாதிகளின் உறுதிகளைக்கண்டிருக்கும் ஜைனர்களின்

நியாயத்திற்கு 'ஸப்தபங்கி' ஸப்தபங்கி, நியாயம் என்று பெயர் இவ்விதம் எந்த வஸ்துவையும் இப்படியுமிருக்கலாம் அப்படியு மிருக்கலாம். இவர்கள் சொல்லுகிறபடியு மிருக்கலாம் அவர்கள் சொல்லுகிறபடியுமிருக்கலாம் என்று பரஸ்பர விருத்தமாகப் பல பேர் பலவிதமாகச்சொல்லும் பிரகாரங்களை யெல்லாம் ஆக்ஷேபிக்காமல் ஒரேவஸ்துவில் ஜைனர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அவர்களுக்கு ஒரு மதஸ்தர்களோடும் விரோதமில்லை. இந்த அபிப்பிராயம்

अन्योन्यपक्षप्रतिपक्षभावाद्यथापरे मत्सरिणः प्रवादाः ।
नयानशेषानविशेषमिच्छन्नपक्षपाती समयस्तथा ते ॥

"ஹேபகவன் ஜினதேவரே உம்முடைய மதத்தைத்தவிற மற்ற மதங்கள் ஒவ்வொரு கக்ஷிகளில் பக்ஷபாதங்கொண்டு ஒன்றுக்கொன்று கக்ஷிப்ரதிகக்ஷிகளைச் சொல்லிக்கொண்டு ஒருமதம் கூறும் விஷயத்தை மற்றமதம் ஒப்புக்கொள்ளாமல் எவ்விதம் பரஸ்பரம் பொருமையோடு கூடிக்கொண்டிருக்கின்றனவோ அவ்விதம் உம்முடைய மதமில்லை. உம்முடையமதம் பரஸ்பரம் விருத்தமான கக்ஷிகளைக் கூறிக்கொண்டிருக்கும் வாதிப் பிரதிவாதிகளை ஸமாஸப்படுத்தும் மத்யஸ்தனைப்போல் எல்லாமதங்களும் கூறும் பரஸ்பரவிருத்தமான ஸித்தாந்தங்களையெல்லாம் பக்ஷபாதமில்லாமல் "ஸ்யாத்" என்னும் அப்படியுமிருக்கலாமென்று பொருளுடைய சப்தத்தைப் பிரயோகம் செய்து ஸமாஸப்படுத்திக் கொண்டிருப்பதால் உம்முடையமதமே ஒழுங்கானமதம் குற்றமற்றது" என்னும் சுலோகத்தால் ஜைனாசார்யரான ஹேமசந்திர ஸூரியால் வீதராகஸ்துதி என்றும் கிரந்தத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதன் வியாக்யான ரூபமான ஸ்யாத்வாதமஞ்ஜரியில் மல்லிஷேணாசார்யராலும் நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இது பர்யந்தம் கூறியதால் ஜைனர்கள் ஒரே வஸ்துவில் பரஸ்பர விருத்தமான பலதர்மங்களை ஒப்புக்கொள்ளுகிறார்கள் என்கிற மற்ற ஒரு மதங்களிலுமில்லாத ஜைனமத ரஹஸ்யம் நன்றாக வெளிப்பட்டது.

இவ்விதம் ஜைனர்கள் கூறும் அனேகாந்தவாதம் ஸரியன்று என்னும் விஷயம் பாஷ்யாதி கிரந்தங்களில் கண்டுகொள்க. ஜைனமதமும் மத்வமதமும் ஒற்றுமையுள்ளது என்பதைக்காட்டு

வதற்காக மாத்திரம் நாம் பிரவிருத்தித்திருப்பதால் அவ்வித ஒற்றுமையை அறிவதற்காக ஜைனமதம் தெரியவேண்டியதா யிருத்தலால் ஜைனமதத்தை மாத்திரம் கூறினோம். அதன் நிரா காணம் நமக்கு இங்கே கூறவேண்டிய அவச்யமில்லை யாதலால் அதை விடுத்தனம்.

இவ்விதம் ஜைனர்கள் கூறுவதுபோலவே மத்வாசார்யரும் தனது மதத்தில் பரஸ்பரவிருத்தமான பலவித தர்மங்களை ஒரே வஸ்துவில் இருப்பதாகப் பலவிடங்களில் கூறுகின்றார். அவை களைச்சிறிது வெளியிடுவாம் 1. மத்வமதத்தில் ஸகலவேதங்களின் தாத்பர்ய விஷயராயும் ஸகலஜகத்துக்கும் கேவலம் நிமித்தகாரண மாயுமுள்ள பரமாத்மா ஸ்ரீமந் நாராயணன்தான் ஒருவரே யாயினும் ஆனந்த மயாதிகரணத்தில் கூறிய அன்னமயம் பிராண மயம் மனோமயம் விஜ்ஞானமயம் ஆனந்தமயம் என்னும் ஐந்து விதமான தனது ரூபத்தாலும், குஹாதிகரணத்தில் கூறிய புண்ய கர்மங்களின் பலத்திற்கு போக்தா, அந்தராத்மா, என்னும் இரண்டுவிதமான தனது ரூபத்தாலும், நலங்கியோ பஸங்கிரஹாதி காணத்தில்கூறிய பிராணம் சக்ஷுஸ் ச்ரோத்ரம் அன்னம் மனஸ் என்னும் ஐந்துவிதமான தனது ரூபத்தாலும் நஸ்தாக தோபி என்னும் அதிகாணத்தில் கூறிய விசுவன் தைஜஸன் பிராஜ்ஞன் என்னும் மூன்றுவிதமான தனது ரூபத்தாலும் அனேகராயுமிருக்கின்றார், என்று ஒரே பகவானிடத்தில் ஏகத் தன்மை அனேகத்தன்மை என்னும் இரண்டு விருத்ததர்மங்களும் இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

அவ்விதமே பகவான் அப்பிராகிருத திவ்ய சரீரத்தை உடையவராய்ச் சரீரத்தைக்காட்டிலும் வேறாக இருந்தாலும் பரம் வ்யூஹம் அவதாரம் முதலிய பல சரீரரூபமாகவும் இருக் கிறார் என்று ஒரே பகவானிடத்தில் சரீரியாயிருக்குந்தன்மை சரீரமாயிருக்குந்தன்மை என்றும்இரண்டு விருத்த தர்மங்களும் இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

இதுபோல் ஆனந்தமயாதி காணத்தில் பகவான் சிரஸ் பக்ஷம் புச்சம் முதலிய அவயவங்களையுடைய ஆனந்தமயம் என்னும் அவயவியாகவும், அவ்வித அவயவங்களாகவுமிருக் கிறார் என்று ஒரே பகவானிடத்தில் அவயவித்தன்மை அவய

வத்தன்மை என்றும் இரண்டு விருத்த தர்மங்களுமிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

இவ்விதம் பகவான் எங்கும் வியாபகராய் ஒருவராயிருந்தாலும், ஸமஸ்தமான பிராணிகளுடைய வஸ்து கண்ணுகிய ஸ்தானத்தில் ஜாக்ரதவஸ்தைக்குப்ரேரகமான விசுவன் என்னும் ரூபங்கொண்டிருக்கிறார். அவ்விதமிருப்பதில் பல குடங்களில் வைக்கப்பட்ட தீர்த்தம்போல் பல கண்களில் இருக்கும் பகவத் ரூபம் ஸ்வரூபத்தினுலும் சரீரத்தினுலும் வேறன்று. பல பில்லுகளின்மேல் விரிக்கப்பட்ட வஸ்திரமானது அந்தந்த ஒவ்வோர் பில்லுகளிலும் தான் பூராவாக இல்லாமல் ஏகதேசத்தால் எவ்விதமிருக்கின்றதோ அவ்விதம் பகவான் வியாபகராயுள்ளவர். தனது ஏகதேசத்தால் ஒவ்வோர் கண்களிலுமிருக்கிறார் என்பது இல்லை. பின்னையோவெனில் நாநாதேசங்களிலுள்ள பல மனுஷ்யர்களுக்கும் அவரவர்களுடையஊர்த்துவதேசத்தில்அவர்களுக்கு அபிமுகமாகப் பூர்ண ரூபத்தோடுகூடவே ஸூர்யன் ஒரேஸமயத்தில் இருப்பதுபோலவே பகவான் தனதுபூர்ண ரூபத்தாலும் ஒவ்வொரு கண்களிலுமிருக்கின்றார், என்று ஒரே பகவானிடத்தில் ஏகத்தன்மை ஒவ்வொரு கண்களிலும் நிறைந்த பல வஸ்துவாயிருக்குந்தன்மை என்னும் இரண்டு விருத்த தர்மங்கள் இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

இதுபோலவே, சிறியதாகக் காணப்படும் கிருஷ்ணபரமாத்மாவின் முகத்தில் பிர்மாண்டத்தையே யசோதாதேவி கண்டதாகக் கூறப்பட்டிருப்பதாலும், ஒரே கயிறுல் ஒருஸமயம் கட்டப்பட்டபடியால் சிறியதாகவுள்ள பாலகிருஷ்ணபரமாத்மாவின் உதரமானது ஒருஸமயம் யசோதாதேவியால் எவ்வளவு கயிறுகளாலும் கட்ட முடியாமல்போனதாலும், பகவத் ரூபமானது அணுவாகவும் ஸ்தூலமாகவும் அதாவது பரிச்சின்னமாகவும் வியாபகமாகவும் உள்ளது என்று பரிச்சேதம், வியாபகத்தன்மை என இரண்டு விருத்த தர்மங்கள் ஒரே பகவானிடத்தில் இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

இவ்விதம் ஸகல ஜகத்துக்கும் கர்த்தாவாயுள்ள பகவான் தான் நிரவயவராயும், தன்னைத் தவிற வேறு பல அம்சங்களில் இல்லாதவராயுமிருந்தபோதிலும், தன்னைத்தவிற வேறான பலவித

தாரதம்யத்துடன்கூடிய பலவித சக்தியையுடையவராயில்லாது இருந்தாலும், அல்பமான கார்யங்களில் தனது ஸ்வரூபபூதமான பூர்ணசக்தியை உபயோகப்படுத்தாமல் தான்ஏகதேசத்தால் பிரவிருத்திக்கிறார். தனக்கு அதீனர்களாயுள்ள ஜீவர்களும் தன்னைப்போல நிரவயவர்களாயிருந்தபோதிலும் அவர்களையும் அந்தந்த கார்யத்திற்குத் தகுந்தபடி பூர்ண சக்தியாலும் ஏகதேசத்தாலும் பிரவிருத்திக்கும்படி செய்கின்றார். என்று பகவானிடத்திலும்,ஜீவர்களிடத்திலும் நிரவயவத்தன்மை ஏகதேசத்தால் அந்தந்த கார்யங்களைச் செய்யுந்தன்மை என்னும் இரண்டு விருத்த தர்மங்கள் இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

இவ்விதம் ஓர் வஸ்துவிலுள்ள ரூபம், ரஸம், கந்தம், ஸ்பர்சம், முதலிய குணங்களுக்குப் பரஸ்பரமும், அவ்வித குணங்களோடு குணியாகிய வஸ்துவிற்கும் பேதமில்லாமல் அபேதத்தை ஒப்புக்கொண்டும், அவ்விதகுணகுணிகளுக்குத் தர்மத்தன்மையும் தர்மித் தன்மையும், தர்மங்களுக்கு ஏகத்தன்மையும் அனேகத் தன்மையும், மத்வமதத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இன்னும் மத்வமதத்தில் அவயவங்களாகிய நூல்களுக்கும் அவயவியாகிய வஸ்திரத்திரத்திற்கும் அபேதமும் நூலிருக்கும் பொழுதே வஸ்திரம் நாசமடைவதால் பேதம் உண்டானபடியால் பேதம் அபேதம் என இரண்டு விருத்த தர்மங்களும் ஒரு வஸ்துவில் கூறப்பட்டிருக்கிறது.

இவ்விதமே அதே இடத்தில் நூலும் வஸ்திரமும் ஒரே வஸ்துவாகிய இருந்தாலும் நூலிருக்கிறது வஸ்திரமில்லை என்று அறியப்படுவதால் ஸத்துவம் அஸத்துவம் என இரண்டு விருத்த தர்மங்களும் ஒருவஸ்துவில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

இன்னும் காரணம் கார்யம் இரண்டும் ஒன்று. சக்தி (ஸூக்ஷ்மம்) வியக்தி (ஸ்தூலம்) இரண்டும் ஒன்று என்று சொல்லிக்கொண்டு காரணம் சக்தி நித்யம் கார்யம் வியக்தி அனித்யம், என்றும் மத்வமதத்தில் கூறுவதால் நித்யத் தன்மை அநித்யத்தன்மை என்றும் இரண்டு விருத்த தர்மங்கள் ஒரே வஸ்துவில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

ஜீவனுக்கும் பிரும்மத்திற்கும் ஜ்ஞானம் ஆனந்தம் முதலிய குணங்கள் ஸமானமாயிருப்பதால் அபேதமும் உண்டு என்று சொல்லிக்கொண்டே பேதமும் மத்வமதத்தில் கூறப்பட்டிருக்கிறது. பிருதிவீ முதலிய பிரபஞ்சத்திற்கும் பிரும்மத்திற்கும் ஸகலபதார்த்தங்களையும் தரித்தல் முதலிய குணங்கள் ஸமானமாயிருப்பதால் அபேதமும் உண்டென்று சொல்லிக்கொண்டே பேதமும் மத்வமதத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இவ்விதம் ஒரேவஸ்துவில் பல விருத்ததர்மங்கள் இருப்பதற்குக்கோடிக்கணக்கான உதாஹரணங்கள் மத்வகிரந்தங்களில் இருக்கின்றன. அவைகளை விரிக்க இரண்டாயிரம் நாவுபடைத்த ஆதிசேஷனாலும் முடியாது என்று இத்துடன் பரிஸமாப்திசெய்து கொள்ளுகிறோம். கீழ்க்காட்டியபடி ஒரே வஸ்துவில் ஒப்புக்கொள்ளப்பட்ட விருத்ததர்மங்களில் ஒன்று ஸத்யம் மற்றது பொய் என்று ஒப்புக்கொள்ளாமல் எல்லாம் ஸத்யமாகவே மத்வமதத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. இவ்விதமிருக்க மத்வமதமும் ஜைனமதமும் ஒன்றுக்கொன்று ஸஹோதர பாவம் பாராட்டிக்கொண்டு எவ்வளவு பிரீதியுடன் இருக்கிறது என்பதைத் தத்துவதர்சிகள் யாவருமறிவார்கள்.

ஆனால் மத்வமதத்தில் விருத்ததர்மங்கள் பின்னவஸ்துக்களில் போல ஒரே வஸ்துவில் இருக்கலாமா என்று சங்கித்துக்கொண்டு விசேஷம் என்னும் ஓர் அபூர்வ பதார்த்தத்தை ஒப்புக்கொண்டு அதன் மஹிமையால் இருக்கலாமென்று ஸாதித்திருக்கிறார்கள். வைசேஷிகர்கள் என்கிற தார்க்கிகர்கள் கூறும் விசேஷத்திற்கும் மத்வர் கூறும் விசேஷத்திற்கும் விசேஷமுண்டு. இதென்ன மூன்று விசேஷங்கள் வந்துவிட்டதே வைசேஷிகவிசேஷம் மத்வவிசேஷம் அவ்விரண்டுகளின் விசேஷம் என்று. அவைகளின் ஸ்வரூபம் யாதெனில் கூறுவாம். இரண்டுகளின் விசேஷம் என்றால் பேதம் என்றுபொருள். இந்த பேதமெனக் கூறப்படும் விசேஷத்தைத்தான் உலகமறியும். வைசேஷிகர்கள் கூறும் விசேஷம் என்னவென்றால் அது பரமாணு முதலிய நித்யத்ரவ்யங்களில் ஒவ்வொன்றில் ஒவ்வொன்றாக அனேகமுண்டு. ஒரே ஜாதியையுடைய இரண்டு பரமாணுக்கள் முதலிய வேறு காரணங்களால் பேதத்தைக் காட்டமுடியாத விடங்களில் ஒன்றுக்கொன்று

பேதத்தைக் காட்டுவதற்காகவே பேதத்துடன் கூடயிருக்கும் படியான விசேஷம் என ஓர் வஸ்துவை வைசேஷிகர்கள் கூறு கிறார்கள். மத்வாசார்யர் கூறும் விசேஷமென்னவென்றால் அந்த விசேஷம் உலகமெங்குமே எல்லாபதார்த்தங் களிலுமிருக்கும் பேதம் சொல்லமுடியாத விடத்தில் பேதம் செய்யவேண்டிய கார்யங்களைத்தான் பேதத்திற்குப் பிரதிநிதியாக இருந்துகொண்டு ஸோமலதைக்குப் பிரதிநிதியாகிய பூதீகம் என்னும் லதை ஸோம யாகத்தைப் பூர்த்தி செய்விப்பதுபோல் செய்துகொண்டு இருக் கின்றது என்று வைசேஷிகதர்சனகாரரான கணாதமுனியைப் போல் தானும் ஓர் முனியென உலகத்திற்கு அறிவிக்கும் பொருட்டே விசேஷமென்றும் ஓர் அபூர்வவஸ்துவை ரொம்பவும் சிரமப்பட்டுக் கண்டுபிடித்து தனது கிரந்தங்களில் மத்வர் ஸ்தாபித்திருக்கிறார். அந்த அத்புதயுக்திகளை அவரது கிரந்தத் திலேயே கண்டுகொள்க.

பகவான் ஒருவித தர்க்கங்களாலும் அல்லது மத்வரால் தனது இஷ்டப்படித்தனது மதத்திற்கு அனுகூலமானதை இவை நல்லதர்க்கங்கள் என்று சொல்லி அதற்கு வேறாக விலக்கப்பட்டு அதனாலேயே சுஷ்கங்கள் என்று கருதப்படும் தர்க்கங்களால் அறியவும் இல்லையென்று ஆக்ஷேபிக்கவும் முடியாதவரானதாலும் அசிந்த்யாத்புத திவ்ய சக்திவாய்ந்தவரானதாலும் அவரிடத்தில், எவ்வித விருத்தகர்மங்களு மிருக்கலாம் பாதகமில்லை என்றும் மத்வ கிரந்தங்களில் ஸமாதானம் செய்யப் பட்டிருக்கிறது.

இவ்விதம் விசேஷத்தின் பிரபாவத்தாலும் பகவானுடைய திவ்யசக்தியின் மஹிமையாலும் ஸமஸ்தமான பதார்த்தங்களிலும் வாஸ்தவமாகவே பலவிதமான விருத்ததர்மங்களும் பரஸ்பர விரோதமன்னியில் ஜைனமதத்தில் போல இருக்கலாமென்பது மத்வமதத்திலுள்ள முக்யமானவிஷயம்.

இவ்விதம் விசேஷம் முதலியதின் மஹிமையால் ஒரே வஸ்து வில் பலவிருத்ததர்மங்கள் இருக்கலாமென்றும் தனது ஸித்தாந் தத்தை அவலம்பித்தே அதன்பலத்தால் மத்வமதத்தில் சிலசில விடங்களில் தனது ஸித்தாந்தத்திற்கு விருத்தமாகவே சில விஷயங்கள் கூறப்படுகின்றன. அதாவது மத்வமதத்தில் ஸாக்ஷிப்ரத்யக்ஷம் பிரபலமென்றும் அது எதனாலும் பாதிக்கப் படாதென்றும் கூறிவிட்டுப் பிறகு ஈசுவரபாதந்திரியுள்ள

ஜீவனை ஸ்வதந்திரனுக் காட்டுவதிலும் பிரமாணமாயும் அப்பிரமாணமாயுள்ள ஜ்ஞானங்களை மாறுதலாகக் காட்டுவதிலும் ஸாக்ஷி அப்பிரமாணமென்றும் தேவர்களுடைய ஸாக்ஷி பிரமாணம் அஸுரர்களுடையஸாக்ஷி அப்பிரமாணம் மனுஷ்யர்களுடைய ஸாக்ஷி இரண்டுவிதமாகவும் உள்ளதென்றும் கூறப்பட்டிருக்கிறது.

இதுபோல் ஜீவனுக்கு அந்தக்கரணத்திலுள்ள துக்காதிஸம்பந்தரூபமான ஸம்ஸாரபந்தம் மித்யை என்று ஓரிடத்தில் கூறிவிட்டு மித்யையில்லை என்றும் மற்றஇடத்தில் கூறப்பட்டிருக்கிறது. அந்தக்கரணத்தில் உள்ள காமம் முதலியதற்கு ஈசுவரனே ஸ்வாமி ஜீவன் ஸ்வாமிஇல்லை என்று கூறிவிட்டு வேறிடத்தில் ஜீவன் ஸ்வாமிஎன்று கூறப்பட்டிருக்கிறது.

இன்னும் மத்வமதத்திலும் அனுபாவரூபமாயும் ஜ்ஞானத்தால் விலகுவதுமாயும் ஒப்புக்கொள்ளப்பட்ட அஜ்ஞானம் மற்றோரிடத்தில் அனுபாவரூபமான அஜ்ஞானம் எப்படி ஜ்ஞானத்தால் விலகுமென்று ஆக்ஷேபிக்கப்பட்டிருக்கிறது.

ஒரேவஸ்துவில் விருத்ததர்மங்களிருக்கலாமென்று கூறிவிட்டு விருத்ததர்மங்களை யுடையவர்களாயிருப்பதால் ஈசுவரனும் ஜீவர்களும் வெவ்வேறு வஸ்துக்களென்று கூறப்பட்டிருக்கிறது. இவ்வித விரோதங்களுக்கும் மத்வமதத்தில் விசேஷத்தால் தான் ஸமாதானம் செய்யவேண்டும். ஆகையால் மத்வமதம் ஜைனமதத்தில் ரொம்பவும் அஸாதாரணமான பக்தியுடன் கூடியதென்னும் மூன்றாவது ரஹஸ்யம் முடிந்துவிட்டது.

ஆகையால்

स्याद्वादसोदरं बौद्धसादरं दोषमेदुरम् ।
वैदिकैरपरिग्राह्यं मध्वचार्वाकदर्शनम् ॥

இதுவரையில் நிரூபித்தவிதமாகச் சார்வாகமதம், பௌத்தமதம் ஜைனமதமென்னும் நாஸ்திக மதத்ரயஸாரபூதமான மத்வமதம் ஆஸ்திக வைதிகோத்தமர்களால் அங்கீகரிக்கக்கூடியதன்றென்று சுருக்கமான பொருள். இதை இம்மட்டோடுமுடித்துக்கொண்டு மற்றும் சில ரஹஸ்யங்களையும் இனி வெளியிடுவோம். சுபம்.

போலகம் ஸ்ரீ. ஸ்ரீராம சாஸ்திரி.

செல்வர்கடமை.

உலகில் சாதாரணமாக செல்வர் என்பதற்குச் செல்வத்தை உடையவர்கள் என்று பொருள். ஆதலால் பணத்தையுடையவர்களின் கடமை என்ன? அவர்கள் எவ்விதமாக அப் பணத்தை விநியோகிக்கவேண்டும் என்பது ஈண்டு கூறற்பாலது. செல்வம் என்பதற்கு வேடிக்கையாகப் பொருள்கூறும்போது, அது யாம் செல்வம், செல்வம், எனக் கூறுமாம்! அதனாலேயே அதனைச் செல்வம் எனக்கூறுவது காரணப் பெயராகும். அன்றியும் இவ்வுலகில்நேற்று எழையாயிருந்தவன் இன்று பணக்காரனாகிறான், இன்று பணக்காரன்நாளையதினம்ஒட்டாண்டி. இப்படிப்பணமானது ஒருவரிடம் ஸ்திரமாயிருப்பதில்லை. இதைக் குமரகுருபர ஸ்வாமிகள் 'நிறைசெல்வம், நீரிற்சுருட்டு, நெடுந்திரைகள்'' எனக்கூறுகின்றார். 'அதாவது மிகுந்த பணமானது தண்ணீரில்தோன்றும பெரிய அலைகளுக்கு ஒப்பானது. எங்ஙனமெனில், கடலில் அலையானது எதாவதுஓர்புறத்தில் திடீரென்றுமலைபோல் உண்டாகும்; உடனே அது மடுவோடு மடுவாகச் சேர்ந்துவிடும். மறுபடியும் அது வேறொருபுறமுண்டாகும். உடனே அது அடங்கிவிடும்' பணத்தின் தன்மையும் அஃதே. இதனையே காளிதாஸன் மனிதனுக்கு எழ்மை நிலைமையும், பணக்கார நிலைமையும், வண்டியின் சக்கரத்திலுள்ள வட்டம்போல் ஒருசமயம்கீழ்ப்புறமிருக்கும், மறுசமயம் மேல்புறமிருக்கும், என்று,

नीचैगच्छत्युपरिच दशा चक्रनेमिक्रमेण ।

என்பதாலும், சாகுந்தலத்தில் விடியற்காலையில் சூரியன் உதயம் ஆவதையும், அதே சமயத்தில் சந்திரன் அஸ்தமிப்பதையும், பார்த்தால் உலகத்திலுள்ள ஜனங்களின்நிலையைத் தானாகவே உணர்த்துவதைப்போல் இருக்கின்றது என்பதை

तेजोद्वयस्य युगप व्यसनोदयाभ्याम् -
लोको नियम्यतइवात्मात्मदशान्तरेषु ॥

என்பதாலும் உணர்த்துகின்றார். இப்படி நிலையில்லாத பணம், ஒருவனுக்கு வந்தால்உடனேயவன் அதைத் துன்மார்க்கங்களில் செலவழிக்காமல் நன்மார்க்கங்களிலேயே செலவழிக்கவேண்டும். தமிழிலுள்ள நீதிவாக்கியங்களில் ''செல்வம்'' அழிவுள்ளது. ஆதலால் அதை வைத்திருத்தலால் வரும்புகழும் அழிவுள்ளதாம் என்பதும் ஒன்றாகும். இந்த வாக்கியத்தை மனதிலுன்னின்

ஒவ்வொரு செல்வரும் தருமங்கட்செய்ய முன்வருவாரென்பதில் ஐயமில்லை. இன்னும் இம் மனிதர்கள் அடையவிரும்பும் தர்ம, அர்த்த, காம, மோக்ஷங்களென்னும் சதுர்வித புருஷார்த்தங்களில், மோக்ஷத்தைத் தவிர மற்றமூன்றும் மோக்ஷத்தையடைய காரணமாகும். அவைகளில் தர்மமானது முதற் காரணம். எப்படியெனில் தர்மங்கட்செய்வதால்சித்தசுத்தி உண்டாகின்றது. சித்தசுத்தி உண்டாவதால், ஸத்குருவை அடைகிறான், ஸத்குருவையடைந்ததும், அவர் ஆத்மஞானத்தை உபதேசிக்கின்றார். பிறகு ஆத்மவிசாரத்தால் மோக்ஷம் அடைகின்றான். என தர்மமானது மோக்ஷத்தைக் குறித்துக் காரணமாகின்றது. பிறகு பொருளைக் கூறினார், பொருளினால் நாம் செய்யவேண்டியதென்னவெனில், தண்ணீர்ப் பந்தல் வைத்தல் வைத்யசாலை ஏற்படுத்தல், குளம் வெட்டுவித்தல், முதலியனவாகும், இப்படிச்செய்வதால் இவைகளே தர்மங்களாகின்றன. அப்படி தர்மங்களாவதால் கீழ்க்கூறியபடி மோக்ஷத்திற்குக் காரணங்களாகின்றன. சுருங்கக் கூறின், மோக்ஷம் என்னும் உப்பரிகையை ஏறுவதற்கு தர்மங்கள் படிக்கட்டுகளாகவிருக்கின்றன. பொருளோவெனில் அப்படிக்கட்டுகளுக்கு ஆதாரமான அடிப்பூமியாகவிருக்கின்றது. கீழ்க்கூறிய தர்மங்கள் எல்லாவற்றிலும் தலைசிறந்துவிளங்குவது மற்றொன்று உண்டு. அதுதான் "அத்யாத்ம வித்யாதானம்." அதற்காகப் பாடசாலை ஏற்படுத்துதல்போன்ற நன்மை இனி வேறுகிடையா. ஏனெனில் தண்ணீர்ப்பந்தல்வைத்தல்போன்ற தர்மங்கள் அதை ஏற்படுத்தியவனுக்குமாத்திரம் மோக்ஷத்தைக் கொடுக்கின்றன. ஆனால் பாடசாலை வைத்தல்போன்ற தர்மங்கள் ஏற்படுத்தியவர்களுக்கும், அதில் வாசிப்பவர்களுக்கும் மோக்ஷத்தைக் கொடுக்கின்றன, இப்பொழுது கும்பகோணத்தில் வேதாந்தபாடசாலை ஒன்று ஏற்பட்டிருக்கிறது. இந்த அருமையான தர்மத்தைக் குடந்தையில் ஆசாரியாள் மடத்தில் ஏற்படுத்தி செல்வர்கட்கு வழிகாட்டிய ஸ்ரீமான் அய்யுவய்யாவர்கட்கு அடியேன்போன்றவர்களுடைய வந்தனங்களைத் தெரிவித்துக்கொண்டு சகலவித மங்களங்களும், கண்வர்முதலியவர்கட்குப்போல் குலபதிப்பட்டமும் இம் மகானுக்குக்கிடைக்க ஈசனை வேண்டுவாம். மனிதனென்றால் அவனல்லவா மனிதன்? என உலகில் ஓர் வார்த்தை உண்டு. அதுபோல் செல்வரென்றால் இவரல்லவா செல்வர்.

A. R. மலையப்பன்

ஸ்ரீ நடேசஸ்துதி.

(முன்தொடர்ச்சி)

अभ्रव्यापि सभामहःपुरवरप्रोद्भासकं लोकयन्
नूनं चन्द्रदिवाकरौ निजकृतेर्वैफल्यमवाप्नुतः ।
अन्तर्नृत्यदुमेशदीप्तिनिचयो व्याप्नोति किञ्चांबरं
बुद्धिं व्योमगतां तनोति भगवन् वन्दे मुहुस्तन्मुहुः ॥३६॥

இந்த சிதம்பரத்தில் ஆகாசத்தை வியாபிக்கின்றதும், புரச்ரேஷ்டத்தை பிரகாசிக்கச்செய்கின்றதுமான ஸ்ரீசித்ஸபையின்காந்தியைப்பார்க்கின்ற சந்திரசூர்யர்கள் தங்கள்சிருஷ்டியின்பிரயோஜனமில்லாததை அடைகின்றார்கள். உண்மையே, மேலும் சபையின் நடுவில்நர்த்தனஞ்செய்கின்ற உமாநாதனுடைய காந்திசமூகமும், ஆகாசத்தை வியாபிக்கின்றது.பார்க்கிறஜனங்களுடைய புத்தியை ஆகாசத்தை அடைந்ததாகவே செய்கிறது. ஓ! பூஜ்யனே! அந்த உம்முடைய காந்தியை சதா நமஸ்கரிக்கின்றேன். கோடி சூர்ய சந்திரப்ரகாசமான சபையினுடைய காந்தியும், சபேசனுடைய காந்தியும் பக்த ஜனங்களுடைய மனஸ்ஸை பரவசமாகச் செய்கிறதென்று கருத்து. (36)

स्तंभो हेममयः पुरोविजयतां यः केतुघण्टान्वितः
त्वत्पूजासमयेऽन्वहं दिविषदस्संभूय यस्यान्तिके ।
घण्टाताडनमाचरन्ति समुदं तद्घोषसंप्रेरिताः
देवा धातृमुखाः त्वदीयचरणं ध्यायन्ति कैवल्यदम् ॥३७॥

ஓ சபேச உம்முடைய பூஜா காலத்தில் தினந்தோறும் தேவர்கள் கூடிக்கொண்டு எந்த த்வஜஸ்தம்பத்தினுடைய அக்ர பாகத்தில் இருக்கின்ற மணிகளை அடிக்கின்றார்களோ அந்த சப்தம் கேட்டு பிரம்மா முதலான தேவர்கள் முக்திப்ரதமான உம்முடைய சரணத்தை தியானஞ்செய்கின்றார்களோ அவ்வித ஸ்வர்ணமயத்வஜஸ்தம்பமானது உம்முடைய சந்நிதியில் சர்வோத்கர்ஷமாய் பிரகாசிக்கட்டும். (37)

स्वामिन् तावकगोपुराणि विपुलान्याचन्द्रबिंबं प्रभो
व्याप्तानीह महान्ति चारुशिखराण्याभान्ति चत्वार्यहो ।

मन्ये नाथ लसन्ति तावकपुरे रम्याः कुलक्ष्माभृतः
नैवास्तेऽत्र गुहेति चेन्नटपते साप्यस्ति रम्या विभो ॥३८॥

ஓ நாத ஓ ப்ரபோ பெரிதுகளாயும் விசாலங்களாயும் அழகான சிகரங்களை உடையதுகளாயுமுள்ள உம்முடைய நாலு கோபுரங்கள் சந்திர மண்டலத்தை வியாபித்திருக்கின்றன. உம்முடைய பட்டணத்தில் நாலுகுல பர்வதங்கள்தான் பிரகாசிக்கின்றனவோ என்று தோன்றுகிறது. பர்வதங்களானால் குகைகள் இல்லையே என்று சந்தேகிக்கவேண்டாம். அழகான குகைகளுமிருக்கின்றன. அக்குகைகளில் கோவிந்த பாதாள் முதலான மகான்கள் வசித்ததாகவும் பெரியார்கள் பரம்பரையால் தெரிகின்றது. (38)

नमामि गोपुराणीश तवमूर्त्यन्तराण्यहम् ।
तान्यद्य परया भक्त्या मुक्तये करुणानिधे ॥३९॥

ஓ கருணைக்கடலான ஈசனே உம்முடைய மூர்த்தி துல்யங்களான அந்த கோபுரங்களை அதிக பக்தியோடு முக்தியின் பொருட்டு நமஸ்கரிக்கின்றேன். ஸ்ரீ நந்திகேச்வரருக்கு பரமசிவன் புண்டரீகபுர வைபவத்தை உபதேசிக்கின்ற சிதம்பர மாகாத்மியம் 3-வது அத்யாயத்தில் சுந்தரங்களான கோபுரங்கள் என்னுடைய மூர்த்தி துல்யங்கள் என்று கூறப்பட்டிருக்கின்றது. (39)

देहोयं विविधैर्गदैरनुदिनं संपीड्यते तन्मनः
त्वध्याने निपुणेतरत्कथमहं मुक्ति परां प्राप्नुयाम् ।
तस्मादेव करादिकं च भगवन् त्वत्पूजनादीन् विभो
नेष्टे कर्तुमुमापते मम गदान् नष्टान् कुरु त्वं सदा ॥

இந்தச் சரீரம் தினந்தோறும் பல ரோகங்களால் பீடிக்கப்படுகின்றது, ஆதலால் மனமானது உம்முடைய தியானத்தால் சாமர்த்தியமில்லாமலிருக்கின்றது. பரையான முக்தியை எப்படி அடைவேன். ஓ! பூஜ்யனே! ஓ! விபோ! ரோகவசத்தால் கை முதலானதும் உம்முடைய பூஜைமுதலானதுகளைச் செய்வதற்கு அசமர்த்தமாயிருக்கின்றது. ஓ உமாகாந்த ஆதலால்எப்பொழுதும் எனக்கு ரோகமில்லாமலிருக்கும்படி அனுக்ரஹம்செய்யும். சமஸ்த திநங்களிலும் ஔஷதம்போல் ஸமஸ்த ரோகங்களுக்கும் நாசகரமான மங்களகரமான உம்முடைய திவ்ய சரீரம் எங்களுக்கு சுகத்

தைக் கொடுத்து ஜீவிக்கச்செய்யவேணுமென்று ஸ்ரீருத்ரம் பத்தாவது அனுவாகம் கூறுகின்றதல்லவா. (40)

कालेऽस्मिन्कलिवैभवान्मतियुतास्सन्तोऽपि केचिन्नराः
त्वत्पादांबुजयुग्मदर्शनविधौ दुख्यन्ति सम्मोहिताः ।
तेषामीशकथं भवेत्तव कृपापाङ्गः सुखैकप्रदः
मद्भाग्योदयतो हि भक्तिलतिका जातार्तिहानिप्रदा ॥४१॥

இந்தக்காலத்தில் கலிமகிமையால் புத்தியுள்ளவர்களும், சாதுக்களுமான சில ஜனங்கள் மோஹத்தையடைந்துகொண்டு உம்முடைய திவ்யசரணகமல தர்சனத்தில்துக்கிக்கிறார்கள்: ஓ ஈசனே சுகத்தைத் தருகின்ற உம்முடைய கிருபா கடாக்ஷங்கள் அவர்களுக்கு எப்படிஏற்படும். மனுஷ்யர்களுடைய துக்கத்தை நாசஞ்செய்கின்ற பக்திக்கொடியானது என்னுடைய ஜன்மாந்திர பாக்யவசத்தாலல்லவோ எனக்கு உண்டாயிருக்கின்றது. உலகில் மனுஷ்யர்களுக்கு தீக்ஷ்ணபுத்தியாலும் சாஸ்திர பாண்டியத்தாலும் சாதுஸ்வபாவத்தாலும் சிவபக்தி உண்டாகக்கூடியதல்ல. கோடி ஜன்மாக்களில் சம்பாதிக்கப்பட்ட புண்ணியங்களால்தான் மங்களகாமான சிவபக்தி உண்டாகின்றதென்று அர்த்தமுள்ள

कोटिजन्मार्जितैः पुण्यैः शिवे भक्तिःप्रजायते । என்று

சிவ கீதாவசனத்தின்கருத்தை ஸ்துதிகர்த்தா நிரூபிக்கின்றார். (41)

स्वामिन्प्रत्यहमाचरामि दुरितं निश्शंकमेवानिशं
कामक्रोधमदादयोऽपि भगवन् मुञ्चन्ति नोमांक्वचित् ।
किन्त्वीश त्वयि भक्तिरस्ति चपला श्रीमन्नटेशाधुना
तामेकां परिगृह्य पापिनममुं कारुण्यतः पावय ॥४२॥

ஓ ஸ்வாமின்! நான் தினந்தோறும் வெட்கமில்லாமல் பாபத்தைச் செய்கின்றேன். ஆதலால் துராசை, கோபம், கொழுப்புமுதலான துர்குணங்கள் என்னை விடுகிறதேயில்லை. ஆகிலும் ஓ ஈசனே சஞ்சலமான பக்தி உம்மிடத்தில் எனக்கு இருக்கின்றது. ஓ திவ்ய நடேச அந்த பக்தியைமட்டும் ஸ்வீகரித்து இப்பொழுது பாபியான என்னை கருணையினால் பரிசுத்தஞ்செய்யும். (42)

(தொடரும்.)

ராஜா. சோமசேகரதீக்ஷிதர்

புத்தகவரவு—மதிப்புரை.

அபிநவாசௌசஸங்கிரஹம், என்றதோர் அபூர்வக்கிரந்தம், லோகோபகாரத்திற்காகவே அச்சிலிட்டு வே. ர. ஸ்ரீநிவாஸதாதாசாரிய சிரோமணி அவர்களால் பிரசுரிக்கப்பட்டு நமது பார்வைக்கு வந்தது. இந்தக் கிரந்தத்தை எழுதியமஹான்—ஸ்ரீ பாதுகாஸேவக ராமாநுஜமுனீந்திரமஹாதேசிகராவர். இவர்களது பூர்வாசிரமத்தில் இந்தக்கிரந்தம் செய்யப்பட்டதாகத் தெரிகிறது. கிரந்தகாரர்களுடைய பாண்டித்தியம் முதலிய பெருமை முகவுரையில் விஸ்தாரமாக வர்ணிக்கப்படுகின்றது. ப்ராமாணிகரான பெரியவரால் எழுதப்பட்ட இந்த கிரந்தம் வர்ணாசிரமதர்மத்தை அவலம்பித்திருப்பவர்களுக்கு மிகவும் அவசியமாயுள்ளது. இந்தக் கிரந்தம் ஸமஸ்கிருத பாஷையிலியற்றப்பட்டிருந்தாலும், அந்த பாஷை இதில் மிக இனிமையாயமைந்துள்ளது. ஸரஸமாயுமிருக்கின்றது. சுருக்கமாயுமிருக்கின்றது. பிராசீன பிராமாணிகக் கிரந்தங்கள் கையாண்ட வழியைவிட்டு விலகாதது. ஸ்வல்பவியுத்பத்தியுள்ளவர்களு மெளிதில் அறியக்கூடியது. அவசியம் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களை ஒரே இடத்தில் பார்க்கும்படி அமைக்கப்பட்டது. மற்றவிடங்களில் சொல்லப்படாத விஷயங்களையும் பிரகாசப்படுத்துகிறது. சொல்லப்பட்ட விஷயங்களையும் பரிஷ்கரித்துக் கூறுகிறது. அந்த விபரமும் ஸம்ஸ்கிருத முகவுரையில் காணலாம். இந்தப்படி இந்தக்கிரந்தம் பரமோபகாரமாயுமுள்ளதென்பதில் சம்சயமில்லை. ஸகல வர்ணாசிரமிகளுக்கும் பொதுவான இந்தக்கிரந்தம் எல்லோராலும் ஆதரிக்கத்தக்கதென்பது சொல்லாமலே விளங்கும். அடிமுதல் முடிவரை பார்த்ததில் எமக்குத் தோன்றியதைச் சொல்லாமலிருக்கக்கூடாதென்பதற்காக பிரசித்தமாயுள்ளதே அறிவிக்கப்பட்டது. இதன் விலை அணா ஆறுதான்.

V. R. S. தாதாசார்யார்,
ப்ரொபஸர்,
ஸம்ஸ்கிருத காலேஜ்,
திருவாடி போஸ்டு.

இந்த விலாஸத்தாரிடம் கிடைக்கும்.

சிறுவருக்கான சிறுகதைக்கொத்து.

தேவயானி

1. ப்ருகுவம்சத்தில் பிறந்தவர் சுக்ரர். அவர் அஸுரருக்கு குரு. அவருடைய பெண் தேவயானி என்பவள், சுக்ரர் ஒரு ஸமயம் விருஷபர்வா என்ற அஸுரராஜனுக்கு ஆசார்யனுக இருந்தார். அந்த அஸுரனுக்கு சர்மிஷ்டை என்று ஓர் பெண்ணிருந்தாள், தேவயானியும் சர்மிஷ்டையுங்கூடி விளையாடுவது வழக்கம். ஒருநாள் வழக்கப்படி விளையாட வெளியிற் சென்றனர். இருவரும் கரையில் துணியை வைத்துவிட்டு ஜலக்ரீடைசெய்தார்கள்.

2. கரை ஏறும்போது தேவயானியின் துணியைத்தெரியாமல் சர்மிஷ்டை எடுத்துக் கட்டிக்கொண்டாள். தெரியாமல் செய்ததை எல்லோரும் மன்னிக்கவேண்டியதுதானே. தேவயானிக்கு கோபம் வந்துவிட்டது. வாயில் வந்தபடி சர்மிஷ்டையைவைதாள். அஸுரராஜன் பெண்ணல்லவா அவள். அவளுக்குக் கோபம் வாராதா? பதிலுக்கு அவளும் வைதாள். சண்டை வலுத்தது சர்மிஷ்டை தேவயானியைக் கிணற்றில் தள்ளிவிட்டு வந்துவிட்டாள். தற்செயலாக அந்தக் கிணற்றண்டை யயாதி வந்தான்.

3. அவளைக் கரையில் தூக்கிவிட்டானவன். தன்னைக் கல்யாணம் செய்துகொள்ளும்படி வேண்டினளவள். அவன்க்ஷத்ரியன். அவள் ப்ராஹ்மணப்பெண், ஆகையால் கூடாதென்று மறுத்தார். அவள் தகப்பனுர் பொர்சைக்கொண்டு கார்யத்தை ஸாதிக்கலாமென்று வீட்டுக்கு வந்தாள். பிதாவினிடம் முதலில் சர்மிஷ்டை செய்ததைப்பற்றி முறையிட்டாள் அவர் அஸுரனைவிட்டு விட்டுப் போவதாகக்கூறினர். அஸுரன் ஆசார்யரைவிட்டுவிட விரும்பவில்லை. நாம் நம் குருவினிடம் அன்பாயிருக்கவேண்டாமா

4. அவர் காலில் விழுந்து தன் பெண்குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டினன். அந்த குருவோ, தன் பெண்ணை ஸமாதாநம் செய்யும்படி சொன்னன். அவனும் அப்படியே அவளிடம்

போய் காலில்விழுந்து வேண்டினன். சர்மிஷ்டை ஆயிரம் தாஸி களுடன் தனக்கு வேலைக்காரியாக வந்தால் தானும் தன் தகப் பனும் அங்கு வஸிக்கமுடியும் என்றாள். தன் பெண் என்ன சொல்வளோ என்று அஞ்சினன் அஸுரன்.

5. ஆனாலும் அவளிடம் இதைச்சொன்னன்; பிதாவின் சொற்படி நடக்கும் நல்லபெண் சர்மிஷ்டை. ஆகையால் அப்பா! உனக்காக நான் உயிரையும் கொடுப்பேன். தேவயானிக்கு வேலைசெய்வது ஓர் கஷ்டமா? அப்படியே அவ்விடம் செல்கிறே னென்றாள். அந்த தேவயானியும் இதைக்கண்டு ஸந்தோஷப் பட்டாள். ஒரு கார்யம் முடிந்தது. இரண்டாவது யயாதி தன்னைக் கல்யாணம் செய்துகொள்வது.

6. இந்த ஸமாசாரத்தையும் மெதுவாக பிதாவிடம் சொன் னாள். யயாதியை அழைத்தார் அவர். சுகன் தன் பெண்ணுக்குச் சாபம்கொடுத்ததால் க்ஷத்ரியன் தான் அவளுக்குபதி. அதோடும் கூப்பிட்டு ப்ராமணன் க்ஷத்ரியனுக்குப் பெண்ணைக்கொடுத்தால் கல்யாணம் செய்து கொள்ளலாம் தோஷமில்லை என்றார். யயாதியும் அப்படியே தேவயானியை மணந்தான். ஆயிரம் வேலைக்காரியுடன் சர்மிஷ்டையும் தேவயானியுடன் யயாதி வீட் டிற்குச்சென்றாள்.

7. தேவயானி சர்மிஷ்டையைத் தன்பர்த்தா பார்த்தால் அவளை விடமாட்டார். கல்யாணம் செய்துகொள்வார் என்று பயந்தாள். ஆகையால் ஓர் அசோகவநத்தில் இவளைத்தனியாக வைத்தாள். தேவயானிக்கு யயாதியிடம் யது, துர்வஸு என இரண்டு குழந்தைகள் பிறந்தார்கள். சர்மிஷ்டையை யயாதி ஒருஸமயம் பார்த்தான். இருவருக்கும் ஸ்நேஹம் பலத்தது; அவளும் கர்ப்பமானாள்.

8. தேவயானி சர்மிஷ்டையைக் கண்டு நீ எப்படி கர்ப்ப மானாய் என்றாள். ஓர் ரிஷி அனுக்ரஹம் செய்தார் என்றாளவள் ஆனால் பாதகமில்லை என்று மன்னித்தாள் தேவயானி. சர்மிஷ் டைக்கு த்ருஹ்யு, அநு, பூரு, என்று மூன்று பிள்ளைகள் பிறந் தார்கள். இக்குழந்தைகள் யயாதியைப்போலவே இருந்ததால்

தேவயானிக்கு ஸந்தேஹம் வந்தது. உண்மையைத் தெரிந்து கொண்டாள். உடனே பிதாவிடம் ஓடினாள் முறையிட்டாள்.

9. அவரும் பெண்ணுக்காகவேண்டி கோபங்கொண்டார். நீ கிழவனாவாய் என்று யயாதியைச் சபித்தார். அரசன் சுக்ரருடைய காலில் விழுந்து தன்னை மன்னிக்கும்படி வேண்டினான். எவராவது இக்கிழத்தன்மையைத் பெற்றுக்கொண்டுயௌவனத்தைக் கொடுப்பதானால் சாபம் நீங்குமென்றார். சர்மிஷ்டையும் யயாதியும் நற்குணமுள்ளவராதலால் ஒத்துவாழ்ந்தனர்.

ஸ்ரீவத்ஸ ஸோமதேவசர்மா.

வாரவிருத்தாந்தம்.

தேனுவுக்கு நல்வரவு. 1உ முதல் திருவநந்தபுரத்திலிருந்து ஓர் மாதாந்தரபத்திரிகை வெளிவருகிறது. அதன்பெயர் "ஸநாதன தர்ம காம்தேனு" இதில் இதிஹாஸபுராணவிஷயங்கள்தோன்றுமாம், ஆராய்ச்சி என்ற சொல், உள்ளதை வேறாகச்சொல்வது என்றபொருளில் தற்காலம் வழங்கப்படுகிறது. இந்தத் தேனு அதுபோன்ற ஆராய்ச்சியில்லாமல்மதாபிமானத்துடன் சாஸ்திரீய முறையில் நடந்தால் இதை வரவேற்போம். பல மதாபிமான பத்திரிகைகள் தோன்றவேண்டும் என்பது நமது அவா.

ஓர்சிறந்தவிருந்து. 16உ முதல் சிதம்பரத்தில் அத்வைதஸபை ஒருவாரம் சிறப்பாகநடந்தது, மஹாவித்வான்கள்பலர் கூடினர், பல ஸத்விஷயங்கள் உபன்யஸிக்கப்பட்டன. இதை நடத்துபவர் யாரென நாம் சொல்லாமலே விளங்கும். சிதம்பரம் என்றபொழுது நடராஜாவுக்கு அடுத்தபடியாக நினைவிற்குவருவது இப் பண்டிதோத்தமரின் பெயரே. பல குருவினிடம் பல சாஸ்திரங்களைப் படித்துப் பாரங்கதராகி எண்ணிறந்த சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்துவரும் பாக்யவானிவர். மஹாமஹோபாத்யாய ஸ்ரீ தண்டபாணிஸ்வாமி தீக்ஷிதாவாள் என்பது இம் மஹானின் பெயர். இவர்மூலமாக அத்வைத உபன்யாஸாம்ருதம் சிதம்பரத்தில் பெருகிஓடிற்று. பாக்கியவான்கள் புஜித்திருக்கலாம்.

கீதை ஜயந்தி. 20உ சென்னையில் ஸம்ஸ்கிருதஸபை ஷிவைபவத்தைக் கொண்டாடியது. இதேபோல் காளிதாஸன்முதலியவர்கள்தினத்தையும் கொண்டாடிவருகிறது. கீதையை எல்லா பாஷையிலும்அச்சிட்டு இலவசமாகஎல்லோருக்கும் வழங்கவேண்டுமென்பது இச் சபையின்கோரிக்கை. வருங்காலத்தில் முனிவர்கள் எதிர்பார்த்தபடி வேதாந்தம் பேசுவோர்கூட்டம் நாளுக்கு நாள் அதிகமாகிவருகிறது. ஆனால் வேதாந்தநூல் கூறும் சித்தசுத்திசமதமாதி முதலியகுணமுடையோரைத் தேடிப்பிடித்தாலும் காண்பதரிது. ஆயினும் எல்லோரும் ஸுகம்பெறவேண்டுமென்ற இவர்நோக்கம் சிறந்ததே. சென்னை அமாகலாவிலாஸினீ ஸபை கன்யகாபரமேச்வரிதேவஸ்தானம் மதுரை தர்மசாஸ்திரஸபையும், ஷிஜயந்தியைக் கொண்டாடியது.

விஷ்ணுயாகம். 16உ கல்கத்தாவைச்சார்ந்த கிருஷ்ண நந்தவனத்தில் ஷியாகமும் சண்டிபதி என்ற கர்மாவும் நடந்தது, அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய மஹாஸபையார் இதை நடத்தினர். ஷிமஹாஸபைக்குப் பூர்வாங்கமாக இக் கர்மா வடதேசஸம்ப்ரதாயப்படி அபார செலவுடன் நடத்தப்பட்டது. பல பண்டிதர்கள் கூடியிருந்தனர். மஹாஸபைகூடி மஹாஜனங்களுக்கு வேதோக்தமான தர்மமூலம் இஹபர நன்மையைப்பெற வழிகாட்டுமென நம்புகிறோம்.

காலத்தில் தர்மம். ஓர் காலவிசேஷத்தாலும் தேசவிசேஷத்தாலும், தர்மவிசேஷபலனை அளிக்கும், தர்மம் தேசத்தில்குறையக்குறைய அதர்மபலமான துக்கம் விருத்தியாகிறது. சென்ற வாரங்களில் உண்டான அதிவிருஷ்டியால் பொதுவாக எல்லா இடங்களிலும் விசேஷமாக திருநெல்வேலியிலும், சொல்லொணாத கஷ்டமும் நஷ்டமும் உண்டானது. வீட்டை பொருளை இழந்து நிற்கும் ஏழைகளுக்கு அன்ன தானமளிக்க சில தனிகர் முன்வந்தனர். நிர்சக்தியால் தவிக்கும் இந்தவேளையில் செய்தஉபகாரத்திற்கு ஈடாக எதைச் சொல்லமுடியும்? முன்னோர்ஸமயம் நமது ஸ்ரீபாமாசார்யாள் வழிகாட்டியதை நேயர் மறந்திரார்.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவ சர்மா.